முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1213

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.01.2023, செவ்வாய்கிழமை

1. அறம் வளர்க்கின்ற அண்ணலே
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   வரம் தருகின்ற ஞானபலமே
   வையகத்தை காக்கும் மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனி
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சுபகிருது கலைதிங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் தை மாதம் 10 ம் நாள் 24.01.2023, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனால் இந்த உலகம்
   தவதர்ம பலமிக்க ஞானலோகமாக
   மண்ணுலகில் சடுதி மாற்றம் நிகழும்
   மகான்களாக மக்களெல்லாம் மாற்றம் பெறுவர்
4. மாற்றம் தரவந்த மாதவசி அரங்கன்
   மண்ணுலகம் அரங்கன் வழி சரணடைந்தால்
   ஆற்றல்பட இந்த மாற்றம் சடுதி காணும்
   அரங்கனால் இந்தஉலகம் அமைதிகாணும்
5. காணவே அரங்கனின் சக்தியாக
   கலியுகத்தின் ஞான சபையுமாக
   மேன்மை பொருந்திய பிரணவக்குடில் தன்னில்
   மேலவர்கள் அலங்கரித்து ஆசிதர
6. ஆசிபெற உலகோர் அவசியம்
   அரங்கன் குடிலுக்கு ஒருமுறையேனும்
   பேசிட இனிதே வந்து கலந்து
   பிரணவக்குடிலின் அருளமுது உண்டு
7. உண்டுமே அரங்கனின் திருபாதம் பற்றி
   உயர்ஞானம் தந்து காப்பாய் என வேண்ட
   வேண்டிட அவர்களுக்கெல்லாம் வினை நீக்கம்
   வினவிட வேலவன் என் கருணையால் கிட்டி
8. தொண்டர்களாகி அரங்கன் தொடர்பை கூட்டி
   தொடருகின்ற தர்மத்தில் இயன்ற வண்ணம்
   வண்ணமுடன் உடல் பொருள் ஆவியென
   வையகத்தில் அவரவர் இயன்ற சரணாகதி கொண்டு
9. கொண்டுமே அரங்கனே யாவுமென
   குறையிலா தொடர்ந்து சேவையாற்றிவந்தால்
   உண்டான உலகோர்க்கு சடுதி மாற்றம்
   உயர்ஞானமாக ஊழைவென்று சடுதி

10. சடுதி ஞானியாகும் வாய்ப்பும்
சர்வபலம் பொருந்திய வண்ணம்
இடரைவெல்லுகின்ற மாதவ தர்மபலமும்
இலகுவாய் கிட்டி அரங்கனால் உலகோர் தேறுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–